செய்தி வெளியீடு எண்: நாள்: 14.05.2012

**தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில்**
**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். கே.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது**

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (14.05.2012) நடைபெற்றது.

சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகைக்கான ஆணையினை 1 பயனாளிக்கும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகைக்கான ஆணையினை 1 பயனாளிக்கும் என மொத்தம் 2 பயனாளிகளுக்கு உதவித்தொகைக்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, பட்டாகோருதல், கல்விக்கடன் கோருதல், இலவச தையல் இயந்திரம் கோருதல், காவல்துறை தொடர்பான மனுக்கள் போன்ற நுற்றுக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு 15 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு பதிலளிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள் மீதும், மக்கள் குறைதீர்க்கும் நாளில் பெறப்பட்ட மனுக்கள் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டு, மனுதாரர்களுக்கு உரிய காலத்தில் பதிலளிக்குமாறு துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. விஜயாராணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு. மூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எம்.பி.இராஜா, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. சரோஜா, துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி, அழகுமீனாள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு** : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.



தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். கே.எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஜெ.விஜயாராணி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.இல.மூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.எம்.பி.இராஜா ஆகியோர் உள்ளனர்.